


செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை தனியாருடன் இணைந்து மாமல்லபுரத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடற்கரை காட்சி ( ஓசன் வீயூ) திடலில் ஆகஸ்ட் மாதம் 12 ந்தேதி முதல் 15 தேதி வரை 4 நாட்கள் நடைபெறும் 2வது தமிழ்நாடு சர்வதேச காத்தாடி திருவிழாவினை காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் முன்னிலையில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், ஆ.ர.ராகுல் நாத், தலைமையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் த.மோ.அன்பரசன் நேற்று (12.08.2023) தொடங்கி வைத்தார். உடன் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எஸ்.பாலாஜி, சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி.பாரதிதேவி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் இதயவர்மன், மாவட்ட சுற்றுலா அலுவலர் சக்திவேல், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, பட்டாபிராம், இந்து கல்லூரியில் நேற்று (12.08.2023) நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு பெற்ற நபர்களுக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் பணி ஆணைகளை வழங்கினர். முன்னாள் அமைச்சர் / ஆவடி சட்டமன்ற உறுப்பினர் சா.மு.நாசர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் ஆகியோர் முன்னிலையில் வாழ்த்து தெரிவித்தனர். உடன் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஆவடி மாநகராட்சி ஆணையர் தர்ப்பகராஜ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் என்.ஓ.சுகபுத்ரா, வேலைவாய்ப்பு துறை மண்டல இணை இயக்குநர் திருமதி.ஆ.ஜோதிமணி, உதவி இயக்குநர் திருமதி.விஜயா, தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் உ திட்ட இயக்குநர் திருமதி.மலர்வழி, இந்து கல்லூரி முதல்வர் முனைவர்.ஜி.கல்விக்கரசி, உள்ளாட்சி பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### மகளிருக்கு எதிரான குற்றங்களை தடுக்க –

# பாதுகாப்பை உறுதிபடுத்த ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா?

## மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 13 -

திராவிட முன்னேற்றக் கழக அரக்கோணம் நாடாளு மன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், அவர்கள் 11 ஆகஸ்ட் 2023 அன்று மக்களவையில், மகளிருக்கு எதிரான குற்றங்களை தடுக்கவும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்னென்ன? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு பகிர்ந்து கொள்ள இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் மாண்புமிகு மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சர் திருமதி ஸ்மிருதி ஈராணி அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சர் அமைச்சர், அளித்த பதில் பின்வருமாறு :

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின்படி காவல்துறை, பொது ஒழுங்கு, உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாத்தல், பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுத்தல், சட்டம் ஒழுங்கை பாதுகாத்தல் ஆகியன, ஏழாவது அட்டவணையில், மாநில அரசுகளின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும் என்றும், அரசியலமைப்பு சட்டத்தின் படி இயற்றப்பட்டுள்ள, இந்திய தண்டனை சட்டம், குற்றவியல் சட்டம், வரதட்சணை ஒழிப்பு சட்டம், பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்பு சட்டம், மற்றும் குழந்தை திருமண தடை சட்டம் ஆகியவற்றின் மூலம் பெண்களின் பாதுகாப்பு உறுதிபடுத்தப்படுகிறது என்று அமைச்சர் கூறினார்.

பெண்களின் உதவிக்கான கட்டணமில்லா தொலைபேசி சேவை எண்181, பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளை படிக்க வைப்போம், பாலினம் கண்டறியும் சோதனைகளை தடுக்க தேவையான சட்டம், துயரத்தி ல் உள்ள பெண்களை மீட்டெடுக் தே்வான சக்தி சதன் திட்டம் போன்ற முயற்சிகளை ஒன்றிய அரசு முன்னெடுத்து வருகின்றது என அமைச்சர் உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

மேலும், மகளிருக்கான அவசர கால உதவி எண் 112 மூலம், நிர்பயா நிதி என்ற திட்டமும், மகளிருக்கான கணிணி வழிக் குற்றங்களை தடுக்க, அகமதாபாத், பெங்களூரு, சென்னை, டில்லி, ஹைதராபாத், கொல்கத்தா, லக்னோ மற்றும் மும்பாய் ஆகிய எட்டு நகரங்களில் மகளிர் பாதுகாப்பு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ள என்றும், சண்டிகரில் தடய அறிவியல் ஆய்வகம் ஒன்றும், 28க்கும் மேற்பட்ட மாநிலங்களில், 1023க்கும் அதிகமான சிறப்பு நீதிமன்றகளும் செயல்பட்டு வருகின்றன என்றும் ஒன்றிய அரசின் அமைச்சர் திருமதி ஸ்மிருதி ஈராணி அவையில் தெரிவித்தார்.

நிர்பயா நிதி திட்டத்தின் மூலமும், காவல் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடனும், காவல்துறை அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகளுக்கு உதவும் வகையில், நிலையான செயல் விளக்க வழிகாட்டு நெறிகளும், பாலின தாக்குதல்களை தடுக்க தேவையான உதவிகளும், மகளிருக்கான குற்ற தடுப்பு முறைகள் குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சிகளையும் ஒன்றிய அரசு வழங்கி வருகின்றது.

மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகமும், தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் நிறுவனமும் இணைந்து செயல்பட்டு, பெண்கள் மன நல பாதுகாப்பு என்ற திட்டத்தின் மூலம், பாதிக்கப்பட்ட பெண்களுக்கான பாதுகாப்பு மையங்கள் அனைத்து மாநிலங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும், தேசிய பெண்கள் ஆணையத்தின் உதவியுடன் மகளிருக்கு தேவையான கணிணி வழி பாதுகாப்பு முறைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன என்று ஒன்றிய அரசின் மாண்புமிகு மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சர் திருமதி ஸ்மிருதி ஈராணி மக்களவையில் திராவிட முன்னேற்றக் கழக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### நே.சிற்றரசு எம்.சி. - தயாநிதிமாறன் எம்.பி. - மு.க.தமிழரசு - அன்பகம் கலை - டாக்டர் எழிலன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# ஆயிரம்விளக்கு மேற்கு - 109வது வட்டத்தில் - 1000 பேருக்கு நல உதவிகள்!

## அபித்நகர் வி.சுரேஷ் தலைமை! வினோத் வேலாயுதம் – க.சிட்டிபாபு – ப.பிரகாஷ் முன்னிலை!

சென்னை, ஆக. 13-

ஆயிரம்விளக்கு மேற்குப் பகுதி 109வது வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 1000 பேருக்கு நல உதவிகள் வழங்கும் விழா நடைபெறுகிறது.

இன்று (13.8.2023-ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 மணியளவில் சூளைமேடு - அபித் நகரில் நடைபெறும் இவ்விழாவிற்கு - அபித் நகர் வி.சுரேஷ் தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம், வட்டச் செயலாளர் க. சிட்டிபாபு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப.பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

டி.ஜோஸ்டேனியல், சுமத சிட்டிபாபு, கே.தட்சிணாமூர்த்தி, அ.குப்பன், என்.இ.சரவணன், ஏ.வெங்கடேசன், ச.ராசுகுமார், சு. சண்முகம், ப.ஜெயராணி, ஜி.ஆர்.மூர்த்தி, ஏ.ஆரோக்கியதாஸ், எம்.அண்ணாமலை, எம்.தியாகராஜன், எம்.முனிரத்தினம், ஆர். சூரியகதிரவன், கே. பால் சுதாகர், எஸ்.பிரசன்னா, டி. ரவிக்குமார், ஜி.ஆனந்தன், மா.ஏழுமலை, டி.பாலன், எஸ்.கே.தாஸ், டி.மணிகண்டன், எஸ்.மேட்லின் மேரி, எம்.உமாதேவி, எம்.ஜெகலட்சுமி, வி.தீபா, சி.அனிதா, உள்பட பலரும் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இவ்விழாவில் - மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.பி., தயாநிதிமாறன், எம். பி., மு.க.தமிழரசு, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, டாக்டர் எழிலன் நாகநாதன் எம். எல்.ஏ., தலைமைக் கழக தேர்தல் பார்வையாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் கலந்துகொண்டு ஆயிரம் பேருக்கு நல உதவிகள் வழங்குகின்றனர்.

வி.எஸ்.ராஜ், எம்.டி.ஆர். நாதன், து.விக்டர், ஆர்.என். துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, புவி.பாலாஜி, ஸ்டெர்லிங் மோகன், என்.பி. இதாயத்பாஷா, பா. கமல கண்ணன், ஆர்.பொன்னம்மாள்,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள்: என்.மோகனவேல், கே. குட்டி, ஜெ.எம்.எச்.இம்ரான் பாலசந்தர், வி.தினேஷ் குமார்,

வட்டச் செயலாளர்கள் : வரதை த.பரி, த.குண சேகரன், டேவிட் இன்பராஜ், கே.எஸ்.தினேஷ்பாபு, மு. மோகன்,

மாவட்ட பிரதிநிதி கள்: எஸ். அருண்குமார், எம்.ஏ.ஆரோன்பிலிக்ஸ், கே.எல்.எம்.மணி,

அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்: வழக்கறிஞர் .பெ.ரகு, மு. சீனிவாசன், எம்.ஏ. ஜெஸ்டின், ஜி.வி.சரவணன், செ. நா.எல்லப்பன், எம்.டி.ஆர். சாரதி, மணிமாறன், ராமகிருஷ்ணன், பி.எஸ்.ராஜா, எம்.விக்டோரியா, டி. செல்வி, சித்ரா உள்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொள்கின்றனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வை. பெருமாள்
### ஆகஸ்ட் 13 (2001)



தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை பொதுச்செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர். ஏறத்தாழ 30 ஆண்டுகளாக தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவர்.

தளபதி அவர்கள் தலைமையில் குடிநீர் பிரச்சினைக்காக நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

2001 ஜுன் மாதத்தில் தலைவர் கலைஞர் அவர்களை அ.தி.மு.க. அரசு காவல்துறை காட்டுமிராண்டித்தனமான முறையில் கைது செய்ததைக் கண்டித்து நடைபெற்ற கண்டனப் பேரணியில் தொழிலாளர் அணிக்கு தலைமை தாங்கி முழக்கமிட்டு சென்றபோது மயக்கமுற்றார். அதுவே அவரது கடைசி பயணமானது.

“பொதுவாக அவருடைய வடிவம் ஆஜானுபாகுவான உருவம். புராணீக பாஷையிலே சொல்ல வேண்டுமென்றால், தி.மு.கழகத்தினுடைய “பீமசேனன்” வை.பெருமாள் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த உருவமா சாய்ந்துவிட்டது என்று நானும் எண்ணியெண்ணிப் பார்த்தேன். ஏங்கியேங்கித் தவித்தேன்” என தலைவர் கலைஞர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


# மாமல்லபுரத்தில் 2-வது தமிழ்நாடு சர்வதேச காத்தாடி திருவிழா!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்தார்! க.செல்வம் எம்.பி. முன்னிலையில்!

சென்னை, ஆக. 13 -

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை தனியாருடன் இணைந்து மாமல்லபுரத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடற்கரை காட்சி ( ஓசன் வீயூ) திடலில் ஆகஸ்ட் மாதம் 12 ந்தேதி முதல் 15 தேதி வரை 4 நாட்கள் நடைபெறும் 2வது தமிழ்நாடு சர்வதேச காத்தாடி திருவிழாவினை காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் .க.செல்வம் முன்னிலையில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், ஆ.ர.ராகுல் நாத், தலைமையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் த.மோ.அன்பரசன் நேற்று (12.08.2023) தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறைகளிலும் தமிழ்நாட்டை முதன்மை மாநிலாமாக உருவாக்கி வருகின்றார். குறிப்பாக சுற்றுலாத்துறையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் செஸ் ஒலிம்பியாட் போட்டியை சிறப்பாக நடத்தி உலக சுற்றுலா பயணிகளின் கவனத்தை ஈர்த்ததன் காரணமாக உலகின் பல் வேறு துறைகளை சேர்ந்த முக்கியமானவர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் மாமல்ல புரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொண்டு வருகின்றார்கள்.

தொடர்ந்து சுற்று லாத்துறையின் மூலமாக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா, மலைவாசஸ்தலங்களில் கோடைவிழாக்கள், பொள்ளாச்சியில் பலூன் திருவிழா, சென்னை தீவுத்திடலில் வெளிநாடுகள், வெளிமாநிலங்களைச் சேர்ந்த கைவினை கலைஞர்கள், கைத்தறியாளர்கள் பங்கேற்ற சென்னை விழா, இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி என சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையிலான நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக உள்நாட்டு சுற்றுலா பயணிகளை அதிக அளவில் கவரும் வகையில் கடந்த ஆண்டு சர்வதேச காத்தாடி விழாவினை தமிழ்நாடு சுற்றுலாத்துறை தனியாருடன் இணைந்து மாமல்லபுரத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடற்கரை காட்சி ( ஓசன் வீயூ) திடலில் நடத்தியது. இந்த காத்தாடி விழாவில் 50,000 க்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு பார்வையிட்டார்கள். சுற்றுலா பயணிகளை கவரும் வகையிலான தொடர் நடவடிக்கைகளால் கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023 ல் ஜுன் மாதம் வரை 6 மாத காலத்தில் மட்டும் 5,27,072 ஆக உயர்ந்துள்ளது. இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023 ல் மே மாதம் வரை 5 மாத காலத்தில் 14,48,16,003 என உயர்ந்துள்ளது.

தொடர்ந்து இரண்டாம் ஆண்டாக தமிழ்நாடு சர்வ தேச காத்தாடி விழா இந்த ஆண்டு (2023) மாமல்லபுரத்தில் இன்று (12.08.2023) முதல் 15 தேதி வரை 4 நாட்கள் நடத்தப்பட உள்ளது. தாய்லாந்து, இந்தோனேசியா, பிரான்ஸ், வியட்நாம், சீனா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் இந்தியா உள்ளிட்ட எட்டு நாடுகளைச் சேர்ந்த சர்வதேச காத்தாடி அணிகள் 200க்கும் மேற்பட்ட காத்தாடிகளுடன் கலந்து கொள்ள உள்ளன.

இந்த ஆண்டு காத்தாடி விழாவில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் “அலைகளின் சிறகுகள், கடல்வாழ் உயிரினங்களை காப்பாற்றுங்கள், தாய் பூமியைக் காப்பாற்றுங்கள்” (Wings of Wave, Save Marine Life, Save Mother Earth) என்ற கருப்பொருளை மையமாக கொண்டு, பல்வேறு கடல் விலங்குகள் வடிவத்திலான காத்தாடிகள் பறக்க விடப்பட்டன. இந்த விழாவினையொட்டி காத்தாடி காட்சிப் பெட்டிகள், நேரடி இசை நிகழ்ச்சிகள், உணவுக் கடைகள் மற்றும் குழந்தைகள் விளையாடுவதற்கான பிரத்யேகப் பகுதி உள்ளிட்ட பல் வேறு வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.

காத்தாடி திருவிழாவிற்கு முன்னோட்டமாக கன்னியாகுமரியில் முக்கடல் சங்கமிக்கும் பகுதியில் ஆகஸ்ட் 4 முதல் 6 வரை 3 நாட்களுக்கு காத்தாடிகளின் அணிவகுப்பு சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

மாமல்லபுரத்தில் நடைபெற உள்ள தமிழ்நாடு சர்வ தேசகாத்தாடி திருவிழாவிற்கு கலந்துகொள்ள சிறுவர்களுக்கு அனுமதி இலவசமாகும். மேலும், விவரங்களுக்கு www.tnikf.com ஆன்லைன் முகவரியில் முன்பதிவு செய்து நுழைவு சீட்டு பெற்றுக் கொள்ளலாம்.

இந்நிகழ்ச்சியில் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர்.எஸ்.எஸ்.பாலாஜி, சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி.பாரதி தேவி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் இதயவர்மன், மாவட்ட சுற்றுலா அலுவலர் சக்திவேல், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்,

### புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் மாதவரத்தில்

# கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

## எஸ்.சுதர்சனம் எம் எல் ஏ தலைமையில் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! கலாநிதி வீராசாமி எம்.பி. - கே.பி. சங்கர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஆக. 13 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 13. 8 .2023 ஞாயிறு மாலை 6 மணிக்கு 19வது வட்டம் மாத்தூர் எம் எம் டி ஏ முதல் பிரதான சாலையில் நடைபெறுகிறது.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம் எல் ஏ தலைமையில் நடைபெறும் இந்த பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர் .எஸ். பாரதி கலந்து கொண்டு சிறப்புரை யாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி , கே பி சங்கர் எம். எல். ஏ. நா.சந்திரபாபு ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்கிறார்கள். வட்டச் செயலாளர் கா. தாமரைச்செல்வன் வரவேற்கிறார்.

பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், க. காசிநாதன், வி. திராவிட வீரன், கே. சிவசங்கரன், ஆ. ராஜேந்திரன், ஆர். முரளி,பி .தரணி, எஸ். கௌரி, வி. கார்த்திகேயன், கே. செல்வன், நா. மோகன் குமார் நாகூர், பா. சந்திரன் கே. ராஜா, வட்ட செயலாளர்கள் கே. அங்குசாமி, இ. கண்ணப்பன், கே. கருணாகரன், வி .ஆர். குப்பன், பி. எஸ். சந்துரு, நந்தினி சண்முகம், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கே. ஏழுமலை ,வீ. மணிகண்டன்,பா. கோபிநாத், எஸ். உதயகுமார், பி. துரைசாமி, பி. ஜெயராஜ், து. தசரதன், கே. சரவணன், எம். காந்தா, 19வது வட்ட நிர்வாகிகள் கோ. சரவணன், ஆ.திருமலை ந. ரகுவரன் பா. துளசி கே. சங்கர் து. கோவர்தன் வே. கன்னியப்பராஜ், ஹரி சுப்பிரமணி, ஏ, கதிரவன் ஆகியோர் முன்னிலை வைக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மிசா.ப. மதிவாணன், வி .இராமநாதன், வி. கண்ணதாசன், வீ. கவி கணேசன், குறிஞ்சி எஸ். கணேசன், மு. ராஜேந்திரன், டி. ராமகிருஷ்ணன், பி. அறிவழகி, எம். ஆனந்தன், தி .மு. தனியரசு, ஜி. துக்காராம் ஏ. வி. ஆறுமுகம், எஸ். நந்தகோபால், பெ. சரவணன், வை. மா. அருள் தாசன், மி. வே. கருணாகரன், ஜி. தயாளன், ஜி. ராஜேந்திரன், என். பரந்தாமன், டி. ஏ. ராஜு, இரா. முருகேசன், பி. சாந்தி, ஆர். டி. மதன்குமார், வி. தியாகராஜன், சன் முனியாண்டி, காஞ்சி மதிவாணன் ,ஆர் .டி. குமார் ,கு. தமிழ்மணி, ஏ. சுந்தர்ராஜ், ஜே. அபுல் ஹாசன், டாக்டர் கோபால், ஜே. தேவனேசன் ,எம். கோமளவள்ளி, அம்மமூர்த்தி, எஸ்.ஏ. சீனிவாசன், பி.வெங்கடேசன், கே. ரவிக்குமார் ,சி. எஸ். எஸ். டி. சீனிவாசன், மூ .சதீஷ்குமார், கேபிள் த. கணேசன், டி. ஜி. ஆர். மணிவண்ணன், இனியன், பி. குணசேகரன், எஸ். சிவக்குமார், கே. சண்முக பிரியன், ஜி. சேகர், சி. அருணாசலம், ஏ. முகமது வசீம், மனோகரன், தங்கராஜ் ,அமுதா மணி ராஜ், கலைச்செல்வி, ஆர். சுதா, யுவராணி, எஸ். கருணாகரன், டி.வினோத், டி. ராஜ்குமார், டி.அமிர்தராஜ், ஆர்.ராஜ்குமார், எஸ். கோபாலகிருஷ்ணன், பி.கருணாநிதி, எம். என் .அஜய் தென்னவன், ஏ. விஜயன், யுவராஜ்,த. விக்னேஸ்வரன், குமணன் ,சசிதரன், ஆர்பி. சௌந்தரராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்

ஆர். பாபு மற்றும் பி. நிர்மல் குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வந்த செய்தி!

